ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருப்
பதிகமஞ்சரி.

ஸ்ரீமாந்

அழகிய மணவாள ராமாநுஜ

ஏகாங்கிஸ்வாமிகளால்

இயற்றப்பட்டது.

குன்றத்தூர்

இராமகிருஷ்ண ரெட்டியாரவர்கள்

பொருளுதவியால்

திருச்சி

...ம்பாள் அச்சுக்கூடத்தில்

...கப்பட்டது.

...914

இ22:417
N14
142846

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

OFFICE OF THE RE
15 JA
MADRAS

திருப்
பதிகமஞ்சரி.

ஸ்ரீமாந்

அழகிய மணவாள ராமாநுஜ

ஏகாங்கி ஸ்வாமிகளால்

இயற்றப்பட்டது.

குன்றத்தூர்

இராயகிருஷ்ணரெட்டியாரவர்கள்

பொருளுதவியால்

ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீபராங்குசர் திருவவதாரம் ௫௲௰௫ ஆகிய.

ஆனந்த-௵

1914

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம;

திருப்
பதிகமஞ்சரி.

கோயில்

சீர்பூத்த நிலமகளுஞ் செழும்பொற் பூமேல்
திருமகளு மடிவருடத் திரைநீர்ப் பொன்னிப்
பேர்பூத்த திருவரங்கம் பெரிய கோயில்
பிரணவவி மானத்துள் பெரும்பாந் தண்மேல்
வார்பூத்த கருவரைவென் மலைமேற் கஞ்ச
வனம்பூத்துக் கிடந்தாங்கு மலர்க்கண் டுஞ்சுங்
கார்பூத்த நிறத்தேவை கருணை மாலை [னே
கண்கள்பயன் பெறக்கண்டேன் களிகொண்டே-
க.

கள்ளமற நூற்கடலைக் கடந்த மேலோர்
காயவன்ன தலசுத்தங் கலந்து செய்த
எள்ளலறுங் கதைபடித்து மெந்தை மாறன்
எவரேனு மெனவுரைத்த தினிது கற்றுந்
தெள்ளியநற் றிருவரங்கன் செல்வத் தொண்டர்
சென்மநிரு பணஞ்செய்து திரியு மாக்கள்
புள்ளடரும் வெந்நரகில் புழுக்கள் கிண்டப்
புரண்டழுது துடித்தலறும் புலையர் தாமே. (உ)

தாமமென விருபாலுந் தயங்கும் பொன்னித்
    தரங்கநீ ரரங்கநகர் தலைவா தெய்வப்
பாமருவு மப்பதின்மர் பாடுஞ் சீர்சால்
    பரமபிறர் பொருள்ஞான்றும் பறித்துப் போந்தேன்
காமமதை சொப்பனத்துங் கடந்தே னல்லேன்
    கடையேனை னடர்க்கவருங் காலற் கஞ்சி
பூமருவு மடியடைந்தேன் போவென் றாலும்
    புகலறியேன் பிறிதெனைநீ புரந்தாள் வாயே ௩.

புகலருஞ்சீ ரரங்கவன்றோர் பூவை மானம்
    பொற்கலைக ளிடைவளரப் புரிந்து காத்து
செகமறிய பாரதப்போர்த் தேரூர்ந் தெல்லாச்
    சேனையுங்கட் டழிந்தவியச் செகுத்தப் பாவை
அகலருங்கூந் தலைமுடிப்பித் தனைத்துஞ் செய்தும்
    அடையாத கடன்பட்டே னவட்கென்செய்தேன்
இகலறக்கை யெடுத்தழைத்த தென்னெஞ் சோவா
    தென்றயருங் குணநினையே னேழை யேனே. ௪.

ஏழையினியந்தந்தோ வென்னுஞ் செய்கே
    னிணையில்லா வைந்துபெய ருண்ஞாலத்தில்
கோளழியெனைப் பிடித்திழுத்துக் குமைத்துப்போகார்
    கொடிது கொடிதவர் செய்யுங் கொடுமையாற்றேன்
பிழை படமனப்பேயும் பெயரா தாட்டும்
    பிழைக்கவழிகாணேனுன் பெரிதாட்கொள்வாய்
மாதிமதி ளேழுடுத்த வரங்கந் தன்னுள்
    மாநிலமுய்ந்திடத் துயில்கூர் செங்கண் மாலே.

மால்காட்டி வனமுலைகள் குலுக்கிக் காட்டி
வஞ்சகப் புன்னகை காட்டி மைதீட்டொண்கண்
வேல்காட்டிப் புலைமேனி மினுக்கிக் காட்டி
விசமுடை மூத்திரத்தை விடுப்புண் யோனித்

தோல்காட்டி மயக்குமிடைத் துடிமின் னாரைத்
துருவிமனஞ் செல்லாமல் துணையாமுன் பூங்
கால்காட்டி மருளோட்டி யெனைக்காத்தாள்வாய்
காவிரிசூழரங்கநகர் கருணைக் குன்றே ௬

குன்றாத வன்குணங்க ளென்னுந் தோறுங்
குலைபபப முய்வுண்டென் றுறுதி கொள்வேன்
பொன்றாத வென்பிழைகள் நினைபோதெல்லாம்
போதாதிந்நாமென்று புலர்வே னஞ்சிக்

கன்றாத மெய்ஞ்ஞானக் கனிகள் சேருங்
காமருசீ ரரங்கநகர்க் காசே கண்ணே
அன்றுதவினைமறைத்த வாழிக் கையா
வழகியமா மணவாளா வமரா ரேறே. ௭

ஏறுதிரு வீடணற்கா விலங்கை நோக்கி
யெழிலரங்கந் துயிலரசே யெரிவை மீளாப்
பேறுதிருவெய்த பெரும் பிரமமேதப்
பெயர் சமக்காரம் புரிந்த பெரியோய் வேதங்

கூறுதிரு மணவாளா குணமொன்றில்லாக்
கொடிய பெரும் பாதகன் யான் கூற்றுக்கஞ்சி
ஆறுதிருவடியெனநின் னடைந்தே னென்னை
யாரருளுக் கிலக்காக்கி யணைத்தாள் வாயே. ௮

ஆளாயென் றனைக்கைவிட் டகற்றினுலு
மறிமேயனுன் புகல்பிறி தின்னருளேயல்லாமல்
தாளால் மிக்கழன்றுதைத்துத் தள்ளினுலுந்
தாயை விடாதழுங் குழவிதன்னைப் போல்வேன்
மாளாதவருள் திருமாமகட் கப்பாலோர்
மந்திையுமதித்தநெடு மாலே வானோர்
காளா யன்றுய்ச்சிகுறுங் கயிற்றாற் கட்டக்
கட்டுண்ட வரங்கமெளனிர் கரிய கோவே. ௬.

அரங்க நகரப்பா மெய்யடியார் நெஞ்ச
மமர்ந்துறையும் பரஞ்சோதி யமராருய்யத்
தரங்கமலி கடல்கடைந்த சதிராளா வண்
சடகோபன் மறைக்கினிய தக்கோய் முன்னோர்
துரங்கமென வந்த கொடுங் துட்டன் மாளத்
தூயலர்க்கை வாய்புகுத்துத் தொலைத்த வெந்தாய்
குரங்கதனே டுண்டசபகுணத்தா யெற்குன்
குரைகழலின் பத்திமைசீர் கொடுத்தாள்வாயே. ௭

இதுவுமது ௰

நான்முகத்து விதிபலிசெய் நாரணனே பதின்மர்கவி
நலங்கொள் மேலோய்
ஆன்முகத்து வயிற்றனைத்து மடக்கி யறிதுயிலரசே
யயோத்தி நின்றுஞ்
சேன்முகத்துக் காவிரிசூழ் திருவரங்கத் தரவணை
மேல் சேர்ந்த வெந்தாய்
கான்முகத்து மலர்புரைநின் கழலிணையை வந்தடை
ந்தேன் காத்தாள் வாயே. ௧

காத்தளிக்குங் கருமணியை கழலடைந்தார் கருத்
தளிக்குங் காமக் கோவை
பூத்தவருள் கற்பகத்தை புண்டரிக பலரினைக் கண்
பொலியும் பொன்னை
நீத்தவர் சேரர்க்கநகர் நேமிசங்கேந் திருநிதியை
நேர்ந்த முத்தை
மாத்தரித்த மரகதத்தை வழுத்தி நனிவழிபடுதும்
வாராய் நெஞ்சே. ௨.

வாராரு முலைகுலுக்கி மயக்குமடவார் மோக
வலைவாய் சிக்கிக்
காராரு மல்குலெனுங் கரும்பாப்பு கதுவ நனி
கலங்கி வீழ்ந்து
நாராரும் பணந்துருவி நாள்நரளு மலைந்தொழிந்தேன்
ஞேய னுள்வாய்
சீராரு மரவணைமேல் திருவரங்கப் பெருங்கோயில்
திகழு மெந்தாய். ௩.

திகழ்ந்தரவிற் கண்வளருந் திருவரங்கச் செல்வனருள்
திருத்தாள் தொண்டர்
இகழ்ந்துரைத்துப் பற்பலவா மின்னல்புரிந்திடினும்
வெறுப் பிறையு மெய்தார்
புகழ்ந்துலகுக் கரசாக்கப் பொன்முடி சூட்டிடினும்
விருப்பம் பொருந்தக் கொள்ளார்
நிகழ்ந்தபசிக் கமுதமென நேர்ந்த துண்பார் பற்றற்று
நிலவு வாரே. ௪.

நிலவுலகில் கூறையுநன் னெற்சோறுஞ் சுவைச்சாறும்
நிதமும் வேண்டி
உலவுமூனை யெமதூத ருறுத்தடர்த்துக் கொடுபோமு
னுய்பர் மேவிக்
குலவுமணி பொன்னரங்கக் கோயில்புகுந்தரவணைசேர்
சேமான் ஞமம்
பலவுமிரு கைகூப்பிப் பாடி திருக் கூத்தாடிப்
பணிவாய் நெஞ்சே. ௫

பணிகொண்ட வளிதுயில் பாஞ்சோதி யரங்கத்தப்
பாவண மாறன்
மணிகொண்ட மறைப்பொருளை மணவாள மாமுனிவன்
வழுத்தக் கேட்டே
அணிகொண்ட சீசைலே சத்தனிய னருள்பரம
வருள்வாய் காபப்
பிணிகொண்ட நாயேனுன் பிரசகுண மருந்தருந்தி
பிழைக்குமாறே. ௬

பிழைபுரிந்தாரிடம் பொறையும்பேரருளுஞ்சிரிப்புமகம்
பெயரா வன்புந்
தழைபுரிந்த நன்றியறி தலுமுன்கண் பத்தியுமித்
தலத்தீந்தென்னை
மழைபுரிந்த வெழுமதிள்சூழ்மாவரங்கத் தனிநகர்வாழ்
பலர்க்கண் ணளா
உழைபுரிந்த கருங்கண்மா தொருவாத மார்பாளா
வுகந்தாளாயே. ௭

உகந்து புறப்படின் சொட்டை யுருவியுனைத் தொழும்
பிள்ளை யுறங்கா வில்லி
அகந்தழைக்கு மெதிராச னருள்பூண்ட மெய்யடியா
ரடிக்காட் செய்து
சுகந்தழைக்க வுணர்வில்லாத் தொல்லடியே னுய்யும்
வணாந்துணைசெய் தாள்வாய்
சகந்துதிக்குந் தென்னரங்கத் தனிநகர முவந்தருளுந்
தம்பி ரானே. அ.

தம்பியெனக் கென்றுரைத்தே தலமேனழைக் கீழாகுஞ்
சாதி யானேன்
அம்பிகடவிய குகனை யாதரித்த வறவாழி
யருட் பேராளா
தும்பிமுரல் பசுந்துளவத் தொடைமுடியோ யரவணை
மேல் துயிலுஞ்சோதி
நம்பிதிரு வரங்கநகர் நாயகனே யெனக்கருள்வாய்
நன்மை தானே. ௯.

நன்மைமலி மணக்கால நம்பியமுனைத் துறைவன்
னண்ணாக்காட்டும்
வன்மைமலி பரமசுக வானந்த மருள்சேம
வைப்பா மீறில்
தன்மைமலி திருவரங்கத் தனிநகரார் மாவகலத்
தனத்தைப் பேணி
தொன்மைமலி புன்புறவித் துயரொழிப்பா யுனைமனமே
தொழுதேன்னானே

திருமலை.

கடலுலகில் சுவைச்சோறு காசு கூறை
காதலித்துத்திரிந்தலைந்து கைமைபேசி
உடலினைநன் கோம்பியிடை யுடுக்கை மாத
ரூனுகர் வானவம்புரிநீ யுய்வாய் கொல்லோ
அடலியமன் றூதரொரு ததக்கு வார்போ
லடர்க்குங்கா லென்செய்வா யகலாதென்றும்
மடலலர்மேன் மங்கையுறை மார்வத்தப்பன்
வட திருவேங்கடவனடி வாழ்த்தாய் நெஞ்சே. க

தாயேயென்றனமே யென் தந்தையே யென்
றாமே மகவேயென் றமரோ யென்று
நோயே பட்டொழிந்தேன் முந் நோக்கத்தானும் [தும்
நுண்ணறிவென் கண்ணானும் நால்கொண்டேத்
வேயேயவ்வானவரும் விருப்புக் தெய்வ
வேங்கடத் தென்னப்பாவோ விழைந்துன்வாசல்
நாயே போற்கிடந்தடியேன் னண்ணி வாழும்
நவிலரிய பெரும்பேற்றை நல்காய் நீயே. உ.

நல்லபனு முப்பதத்தி னவில் சொரூப
ஞான விசுவாச ருசி நலஞ்சற்றில்லாப்
புல்லன்யான் வன்னெஞ்சன் புவியோர் போற்ற
புனிதனெனப்பொய்வேடங்காட்டிப்போந்தேன்
அல்லலமரகங்கார மருத்தங் காம
மகற்றகிலேன் பதகனெனை யாள்வாய் கொல்லோ
தொல்லருண்பிக் கஞ்சனமாத் தாய்வெற் பார்ந்த
தொன்முதலே புள்ளுயர்த்த சுருதித் தேவே. ௩

உயர்சிகர வேங்கடமா மும்பர் மேவு
முன் மலைமேல் சரிந்து தலையுறக்கீழ்வீழ்ந்த
கயவனைப் பழுதின்றி காத்த நிற்குக்
கைம்மாறென் றறியேனான் கடுகவோடி
அயர்வரு நித்திபரிறும்பூ தடையமுந்நா
ளருமடுவிற் குதித்துகரா வடர்த்தவ்வானை
துயரறப் புண்ணிடைவாயில் தூசிட்டூதி
தொட்டொற்றிங் காத்தாண்ட தொல்லைமாலே. ௪
[வாய்
தொல்லைபெரு முடற்சிறையைத் தொலைத் தாட் கொள்
தொண்டுசெயு மனந்தாழ்வான் றுணைவிதனாங்
கொல்லையிற்கொள் மண்சுமந்து கூர்மண்வெட்டி
கொண்டெறியு மடிசுமந்து கோயில் புக்க
எல்லையில் வண்புகழிறைவா விமையோ ரேத்து
மீடெடுப்பிலஞ்சனவெற்பிலகு மெந்தாய்
குல்லையணி மணிமுடியோய் குறை சங்காழி
கொண்ட சுரர் குலமவியக் குமைத்தகோவே. ௫

கோவமெலாந் திரளவுருக் கொண்டேன் றீமை
கொள்கலத்தேன் கற்பமைந்த குணத்தி னல்லார்
சாவமெலாம் பொதிந் தெழுந்தேன் றயை சற்றில்லாச்
சழக்குடையேன் சந்ததமுஞ் சகத்திற் காணும்
பாவமெலாஞ் செய்தொழிந்தே பாவியானேன்
படிற்றொழுக்க மிகவுடையேன் பரிந்து நீயென்
தாவமெலாந் தணியவருள் தருவாய் சேடத்
தடவரையார்ந் தருளொருமாத் தனிநல் லோயே

சா.

ஒரு மாறனருள் வேத மோதி யாவு
முணர்நல்லான் பட்டருயர் பெரிய நம்பி,
பெருமாற திழுத்துவரும் பிணக்கினுக்கும்
பிள்ளையுறங் காவில்லிப் பெயர்தாசர்க்கும்
அருமாறனேர்நம்பி யவர்க்குஞ் செய்த
வறச்செயல்க ளறிபெரியோ ரனந்த வெற்பார்
திருமாறனடியவரோத் திறத்தோ ரேனுந்
தெய்வமெனப் பூசித்துத் திகழ்வாரன்றே. ௭

திகழ் வடவேங்கடத்தப்பா திறல்சங் காழி
செய்ய வெதிபதியளிக்கச் செயத்தி னேந்தும்
புகழ் தடந்தோள் திருவாளா பூமபொற்றளா
பொன்னனுரமிடந்து சிறுற்புரந்த வெந்தாய்
நிகழ் சடகோபனுக்கினிய நெடிய மாலே
நீசன்யான் பிறர் மனை பொன்னிலத்தை நவேண்டி
இகழ் மடயர்தலைவனென விகந்தேன் வாறு
ளினிவடைந்தேனடி தனைகூர்ந்தெனையாள்வாயே, ௮

கூராழி செயத்திரதன் குலைய வேவிக்
குந்தி பெறுமைந்தனுயக் கொடித்தேருர்ந்தன்
றோராழித்தே ரவனை யொளித்த மாயா
வொப்புயர்விலஞ்சன வெற் பொளிருஞ் சோதி
பேராழி மாருதிக்கை பிறங்க வீந்து
பெருமாட்டிக் கணுப்பியசீர்ப் பெரியோய் பாலின்
சீராழி யனைதுயிலுஞ் செல்வத் தேவே
சிறியேனுன்னடியடைந்தேன் செகத்தாள்வாயே. ௯

செகத்திலமுதமும் விடமுஞ் சேர்த்துட்கொள்ளுஞ்
செய லொப்பவுனை விடயாந்தரத்தைத் தீய
அகத்திலுறக்காதலிப்பேனந்தோ ஞானத்
தமரரொளிர் நித்தியமா மமலானந்த
சுகத்திலுறும் வழியறியேன் றுருவிக் கால
தூதர் வளைந்தெனைப்படர்க்கத் தொடரும்போது
ககத்திலுபர் வடதிருவேங் கடக்குன் றூர்ந்த
கண்ணனேவாகாப்பதுநின் கடமையாமே. ௧௰

இதுவுமது.

தேனேந்தும் மலர்ப்பாவைச் சீவக்கத் தலத்துறையுந்
தேவ தேவா
வானேந்து முலகமெலாம் வந்துதொழும் வேங்கடமா
மலைசேர் மைந்தா
கானேந்துங் கழலிணைகள் சரணமென வந்தடைந்தேன்
கதிமற்றிலேன்
ஊனேந்து முடல்சுமந்திங் கெத்தனைநா ளுழல்வேனு
னுவந்தாள் வாயே. ௧.

நாளு முதிர்சுவையுணவை நாடியுழல் வேன்சிறிதும்
நாணில்லாமல்
மாளுமுட லோம்பிசெல மலங்கழிப்பேன் மாசகன்ற
மனநல்லார் மேல்
நீளுமபராதநெடி துரைப்பேன்மங் கையர் கலவி
நினைந்துநைவேன்
ஆளுமுனை யிறைநினையே னுள்வாயோவஞ்சனவெற்
பமர்ந்த வையே. ௨.

ஐயமறவென்பிழைகளரிதாய்தல் சருவஞ்ஞ
னைநிற்கும்.
வெய்யவிடியாநரகம் மேன்மேலும் படைப்பரிது
விளம்பக் கேண்மோ [ல்லை
வையமதிற் பொறுத்தேனென் றுளங்கொள்ளில் வாதி
வழக்கொன் றில்லை
செய்யநறும் புனலருவி திரண்டொழுகும் வேங்கடஞ்
சேர் செல்வத் தேவே. ௩.

செல்வமலி சிகரமுயர் திரியக்குத் தாவரமாஞ்
சென்மத் தொன்றை
ஆல்வழக்கிலறிஞரவா வணிதிருவேங் கடமடைவா
யன்பு கூர
நல்வகையினல் நமவோ நாராயணாயவென
நவில்வாய் செய்த
பல்வகையாம் பவமொழியு மம்மலைவாழ் பரஞ்சுடரைப்
பணிவாய் நெஞ்சே ௪.

வாய்மையம ருக்கரிய வாழ்வளிக்கு மாதவனே
மண்ணின் மாந்தர்
எய்மையமரிடர்தீர வீந்திடுகாணிக்கை நனி
யிச்சித் தேற்குந்
தூய்மையமருட்கடலே தாரவென்பவக் குழியை
தூர்த்தாட் கொள்வாய்
செய்மையமர் நெடுஞ்சிகர வடதிருவேங்கடமலைமேல்
சேர்ந்த வெந்தாய் ௫.

சோர்ந்தமல ரேமைகுரு டுன்மத்தஞ் செவிடருநோய்
தீர்த்துக் காக்கும்

ஆர்ந்தநலத் தாழ்வார்க ளறைபுகழ்வேங் கடத்தப்பா
வலைந்தூர் தோறுஞ்
சார்ந்தனமேற் றுண்டி னுமெத்தனை நாளிச்சகத்திருந்து
தளர்வேன் யானுன்
ஊர்ந்த சக டுதைத்தருளு முபயதிரு வடிமலரொற்
குதவு வாயே. ௬

வாயதனால் வீண்வார்த்தை வதறிடுவே னுனைநாளும்
வழுத்தி யேத்தேன்
நேயமதாப் பலவிடயங் காதலிப்பேன் னெஞ்சுருக
நினையே னுன்னை (ன்
காயமதாற் பல்லுயிர்க்குங் கண்டகம்போலிடர்புரிவே
கனவிலேனும்
ஏயமிலா வுனைப்பணியே னெழில்பெறுவேங்கடத்தெந்
தாய் என் செய்கேனே ௭.

செய்யமணி கொழிக்குமறல் சேர்திருவேங்கடத்தெந்
தாய் சீர்சால் மன்னன்
பொய்பறவேய் பொற்பூவுங் குறும்பறுத்த நம்பிநிதம்
புனைமட் பூவும்
ஐயபாறவுவந்தருளு மன்பவுல கனாப்பகட்டி
யடர்க்கும் நாயேன்
மெய்யடிமை பூண்டவன்போல் மெல்லடியை வந்தடை
ந்தேன் விரைந் தாள் வாயே. ௮.

விரையடர்ந்த குழன்மடவார் விம்முமுலைக் களிறடர்க்க
விழுந்து நொந்தேன்
உரையடர்ந்த கருங்கண்வே லூரத்திளிடை யூடுருவ
வுளைந்து நைந்தேன்

அரையடர்ந்த வல்குலெனு மரவுகடித்திடவலமந்
 தயர்ந்தே னஞ்சி
தரையடர்ந்த வேங்கடத்தாய் தளிர்புரை நின்னடியடை
 ந்தேன் றமியே னானே. சு.

ஆள்வாய்நீ யெனையோரஞ் சலிக்கிரங்கு மருட்கடலே
 யாக்கை போக்கி
மாள்வாய்போய் வைகுந்தம் புக்கவரும் வந்துதொழ
 மனத் தவாவும்
நீள்வாய் வேங் கடக்குன்றி னின்றேய்தீ விடங்காலும்
 நெடுநாகப் புத்
தேள்வாய்பாற் கடலுறங்குந் தெள்ளமுதே தேட்ட
 ருஞ்சீர் தெவிட்டாத் தேனே. ௰.

பெருமாள் கோவில்

சீராளா கருணைமலர்த் திருவாளா பதின்மர் புகழ்
 சீர்சால் கச்சி
ஊராளா வுண்டுமிழ்ந்த வுலகாளா வாயிரமா
 மொப்பில்லாத
பேராளா வடியவர்தம் பிழைகாணு வருளாளா
 பேணு ரேத்தும்
போராளா மறைபுகலும் புகழாளா வெனது பிழை
 பொறுத் தாளாயே, க.

கையாருஞ் சக்கரத்தென் கருமணியே யுச்ச மிடுங்
 கச்சி நம்பி
மெய்யாரன் பருக்காறு வேதவிர கசியமொழி
 வெளியிட்டாண்ட

ஐயா பேரருளாளா வத்திகிரிவரதா நின்
னடியா ரென்னைப்
பையாவென் றழைக்கவவர்க் காட்படுத்தி படியிடைநீ
பாலிப் பாயே. ௨.

சிவமொருமுதற்கடிமை திண்ணமெனப்பிரணவத்துள்
தெளிந்த மேலோர்
ஆவதொன்று மில்லை நமக் காதுமில்லை யென யாவு
மறவிட் டென்றும்
ஒவறுமெய்த்தனம்பார தந்திரிய மெனவுவந்தவ்
வொருவித் தாகுந்
தேவர்தொழு மத்திகிரிதிருவாள னருள் நோக்கித்
திகழ்வார் மாதோ. ௩.

கண்டுகளி பொற்பணமுங் கல்லிழைத்த மோதிரமுங்
காப்புங் காதுக்
குண்டலமும் வந்திடுமோ கூடுவிட்டுப்போம்போது
கூடக் கூடி
சண்டநமன் விடுவானோ சன்மமதைத் தருமாசை
தடிந் தெஞ்ஞான்றும்
மண்டலத்தி லத்திகிரி வரதனடி மலரிணையை
வழுத்தாய் நெஞ்சே. ௪.

தேவர்தொழ வத்திகிரி சேர்ந்துறையும் பரஞ்சுடரைச்
செங்கண் மாலை
ஆவலுடன் வரதாவோ வருளாளா கண்ணாவென்
றரற்றிப் பாடி
ஒவலறக்கைகொட்டி யுலகர்சிரித் திடப்பிதற்றி
யோடி யாடி

பூமிதனில் விழுந்துருண்டு புரண்டழுது தொழுதெழு
வோம்போதாய் நெஞ்சே. ௫

வேடனா யஞ்ஞான்று விந்தியாடவி நின்றும்
விடியா முன்னம்
கேடிலா தெதிபதியை கிளர்கச்சிபுற சாலைக்
கிணற்றின் பாங்கர்
கூடமா வரநடந்து குளிர் புனல்பூ மகள் கேட்க
கொணர்ந்து வைத்தாள்
பீடுறு வத்திகிரி பேரருளா ளாவெனை நீ
பெரிதாள் வாயே. ௬

அத்திகிரி யெனமலைந்த வன்றதன்கொம் பொசித்து
பிணை யளித்த வெந்தாய்
அத்திகிரி யேவிவெயி லன்றொளித்த பரஞ்சோதி
யவனி யுய்வான்
அத்திகிரி யமர்ந்துறையு மருளாள வன்புசெயு
மடியார்க் காளா
அத்திகிரி யௌவுடையே னருட்கிலக்கமாக்கியெனை
யணைத்தாள் வாயே. ௭

உலகுபக ழத்திகிரி யுறைமதனைப் பெறுகாலை
யுவண னேறி
இலகு திருக் கச்சிநக ரெழிற்றெருவு டுலாவவென்பி
னிருந்து கண்டாள்
கலதவிழி யென்மகள்தான் கலைசோர வளைசோரக்
கருத்துஞ் சோர்ந்தாள்
அலகறுந்தன்னிறைவழிந்தாளயர்கின்றா ளென்செய்கே
னந்தோ யானே. ௮

செய்யகரி கிரிவெஃகா திருத்தண்கா கார்வானந்
திருவேளுக்கை
பொய்யில் புகழ் திருவட்ட புயகரம் பாடகமமரர்
போந்து தாழுந்
துய்யதிரு நிலாத்திங்கள் துண்டமரு நீரகஞ்செஞ்
சுடராழிக்கை
ஐயனம ரூரகமா வணிபரமேச் சுரநகர
மடைவாய் நெஞ்சே. ௯

அறந்திகழு மத்திகிரி யமர்ந்தொளிரும் பரஞ்சுடரே
யடலாழிக்கை
மறந்தவிர்க்கு மாமணியே மாற்றில்லாப் பசும்பொன்
னே வானோ ருண்ணுந்
திறந்தருநற் றீங்கனியே தெவிட்டாத தெள்ளமுதே
தேனே பாலே
சிறந்தபுகழ் சற்பகமே சிறியேன்வல் வினையனைத்துந்
தீர்த்தாள் வாயே. ௧௰

திருநாராயணபுரம்.

திருமருவுந் தாள்மார்பு திவளுஞ் செல்வத்
திருநாராயணன் றன்னை சிட்டர்க்காக்கச்
செருமருவுந் திகிரிவளை திகழ்தோள் மாலை
செங்கமலக்கண்மணியை திருத்தி முக்கோல்
குருமருவும யாதவநற் குன்றந் தன்னுள்
குலவடியா ருடன்கூடி கோயில் புக்கு
கருமருவும் நாய்க்கடையேன் கண்ணு லாரக்
கண்டுபழவினை தீர்ந்தேன் களிகூர்ந்தேனே. ௧

கூரிய வேற்கண் மடவார் கூற்றுவார் மெய்
குலைந்திடினு மன்னவர்பால் குறுகாதென்றும்
ஆரியனன் கருணைமறுவி னருத்தத் துண்மை
யறிந்தகந்தை பொருளரிவை யாசைநீத்து
சீரியவவ்வெதிராசர் தேடிப் பெற்ற
திருநாராயணபுரத்துச் செல்வப் பிள்ளை
வரியலுங் கழலிணையை யிறைஞ்சி யேத்தி
யிருஞ்சுகம்பெற் றினிதுய்வா யேழை நெஞ்சே

௨.

ஏழையெனக் கருள்புரிவா யிராமனு யன்
றிச்சைபெறுக் குறைதீர வெதிகள் கோவாய்
தாழையுயர் பெரும்பூதூர் தன்னிற் றோன்றி
தருமத்தைச் செறுங்கலியால் தளர்ஞாலத்தைப்
பீழைபறுத்தா னனந்தப் பெருமான் செல்வப்
பிள்ளை யெனவுலகழைக்கப் பிறங்கு மெந்தாய்
மாழையது கிரியுறையும் வரதா வேதர்
மங்கையமர் மெய்யனையன் வாழ்த்தும் மாலே.

௩.

மெய்யடிய னெனப்பகட்டி மேதக்கோர்முன்
வெட்கமிலாதுளறிநனி வெருட்டி யூத்தைப்
பொய்யுடலை யோம்பிமனம் போம்போக்கெல்லாம்
போயலைந்து கண்டதெல்லாம் பொருந்த நச்சி
வையகத்தில் திரிந்துழலும் பாளா வஞ்ச
மாபாவி யேற்கருள்தான் வாய்க்குங் கொல்லோ
செய்யவருளெதிராசர் சேர்ந்து போற்றுந்
திருநாராயணபுரத்துச் செல்வத் தேவே. ௪

செல்லுருவத் திருவழகா செல்வப் பிள்ளாய்
சிலம்பொலிக்கக் கிலகலெனத் தெரிவைக்கந்நாள்
கல்லுருவ மகற்றியருள் கழலைப் பேர்த்து
கடுநடையிட் டெழுகவெனக் களிப்பால் வந்து
சொல்லுருவம் முரியணைக்கத் தொடைமேல் நின்ற
தூயயது கிரியுறையுஞ் சோதிநம் பீ
அல்லுருவத் தழுக்ககல வடியேன் பாவ
வகத்துமெழுந் தாருள்செய் தாட்கொள்வாயே.
ரு.

கொள்ளையென மந்திரத்தைக் குணநோக்காமல்
கோபுரமே றித்தூற்றிக் குறைதீர்த்தாண்ட
தெள்ளியவவ் வெதிராசர் தெரித்த வண்ணந்
திருநாரா யணபுரத்தோர் சிற்றில் கோலி
எள்ளியவிவ் வுடம்பொழியு மெல்லை காறும்
இனிது கடைத்தலை சீய்த்தங் கிருந்து செல்வப்
பிள்ளையடி மலரிணையைப் பிரியா தேத்திப்
பேறுக வசிப்போம்வா பேதை நெஞ்சே சு

பேதைமனமே மடவார் பெரும்பே யாவார்
பிழையிலரேனு மவர்தம் பின் செல்லாதே
கோதைவிளை யன்னவர்பால் குறுகாதே மெய்க்
குறிகளொன்றும் பாராதே கோசிகன்றன்
காதையுணர்வா யணுகில் கலக்க முண்டாங்
கடுநரகந் தப்பாது காண்புன் சன்ம
வாதையற யதுகிரிமால் வனத்தாள் சார்ந்து
வல்வினைதீர்ந் தொல்லைநனி வாழ்வாய் நன்றே. எ

நன்றுசிறு மூறிதிருநன் னாட்டிற் செல்ல
நல்குமெதி பதியருளால் ஈாட்டுங் கோயில்
சென்றுதிரு நாரணனே செங்கண் மாலே
சீரார்ந்த யதுகிரிவாழ் செல்வப் பிள்ளாய்
என்றுதுதித் திருதய நைந் தெழுந்து துள்ளி
யிருகண்ணீர் கான்றநனி யிஃதறஞ்சிப்பாடி
நின்றுதிருக் கூத்தாடி நிலத்தில் வீழ்ந்து
நெக்குருகிப் புரண்டழுவோம் நீவா நெஞ்சே. அ.

நீவாரப் புல்லவனுண் ணெடுமால் மாறன்
னிகமந்தந் தெதிராசர் நெறிசொண் டேத்தும்
மேவார யாதவமா வெற்பின் மேலிம்
[மான்
மேதினியுய்க் திடத்திகழும் விண்ணோர் கோ
பூவாரத்திருமருவும் பொன்னந் தாள்கள்
போய்த்தொழுது சிலகுணப் புணரிதோய்ந்து
நாவாரப் புகழ்ந்தின்பம் நாட்டங் காண
நாங்குனிப்போம் வருகவினி நலத்தேனெஞ்சே
கூ

நலமிக்க வெதிபதிதன் னாணை கொண்டு
நாற்குலத்தி லிழிந்தவரும் நண்ணிப்போற்றி
சலமிக்க கலியாண சரசில் மூழ்கி
தண்சுனை யாதவகிரிமால் சந்நிதிக்குள்
குலமிக்க வேதியர்தங் குழாத்துள் புக்குக்
குலவியினுந் தீர்த்தமுங்கைக்கொள்வாரென்னில்
பலமிக்க பதிதபா வனமாம் பாரில்
பளகிலிச்சேகத் திரப்பெருமை பகரற் பாற்றோ. ய

பகாருந்தன் னுலகில்விதி பலிமுன் செய்த
 பாராமப் பிரியனெனபரிந்த யோத்தி
நகமதுராபுரிபன் னுள்பின் னின்ற
 நலந்திகழ்நா ரணதிருவாழ் நளினத் தாளோய்
அகாவெழுத்துப்பொருளே யருட்பேராளா
 ஐயனெதி பதியணையா தவமா சைலச்
சிகரமொளிர் செல்வப்புத் திரனே வன்பர்
 சேவடிக்காட் படுஞானத் திருவீந் தாளே. கக

வைரமுடி சேவை.

கடியும் வல்லிருள் செல்வநற் பிள்ளை தன்
 கதிர் விடுஞ் சுடர் வைர
முடியும் பங்கயக் கண்களுங் கரமும் புன்
 முறுவலுந் திருவுருவும்
அடியுமஞ்சிறைக் கருடனு மணிமரு
 மாலையுந் திருக்குழுவும்
விடியும்நற்றிரு விழவுமென் றன திரு க
 விழிகள் விட்டகலாவே,

திருத்தேர்.

சேரீர் யதுகிரிவாழ் செல்வநாராயணனைப்
பாரீர் திருத்தேரில் பாமரர்காள்—வாரீர்
வடம்பிடிக்க நீவிரந்த வைகுந்தத்தேபோய்
இடம்பிடிக்க வேண்டு மென்றக்கால்

தொண்டனூர்.

கண்டனூ ரும்பத்துக் காட்டிச்சமணரைமுத்
தண்டனூ றூர்நம்பி தான்வருமூர்—தொண்டனூர்

காரணனை யாளரியைக் கண்ணனைச் சங்கத்தோள்
நாரணனைக் கண்டுகொண்டேன் ஞான்,

மிதுலைச்சாலைக்கிராமம்.

இதுவோ எதிவேந் தெழுஞ் சிங்கர் கோயில்
இதுவோ திருத்தா ளிணைநீர்—இதுவோதான்
மேலைவடுகநம்பி மெய்ந்நோய்தீர்த்தாட்கொண்ட
சாலைக்கி ராமத் தலம்.

வேறு.

பாலைக்கிராம மழியாதுடன்வந்த பாவை நல்லாய்
மாலைக்கிராம வனுசனிம் மண்ணுய்ய வந்தருளுஞ்
சோலைக்கிராம மடிநீர்மால் கோயில் துலங்குமந்த
சாலைக்கிராம மிதுகாண் தடங்கணாய் சார்ந்தனமே.

பண்டரிபுரம்.

வண்டரிமலர்மே லயற்கறி யானை
வணங்கு மன் பருக் கெளி யானை
புண்டரிகனுக்காச் செங்கல் மேலிணைத்தாள்
பொருந்திட விருகையு மருங்கில்
கொண்டரி விடலென் றுருகி கூத்தாடிக்
குவலயமுய்யநின் றானைப்
பண்டரிபுரம்போய் பதமணைந்தாடிப்
பாடிநான் பெற்றனன் பயனே.

திருமுட்டம்.

உலகம் புகழ்முட்டத் தொண்மாலை நச்சிக்
கலகஞ்செய் கண்ணாளென் கன்னித்—திலகம்
நிறைகடந்தாள் வாய்வெருவும் நெட்டுயிர்க்கும் நிற்கும்
முறைகடந்தா ளென்னை முனிந்து. க.

முனிவுக்கஞ் சாளென் மொழிசற்றுங் கேளாள்
தனிவுக் கிரங்கி யுளர்வாள்—கனிவுக்கு
வைதவெதனனோ வென்பாள் வயல்முட்ட மாமாயன்
செய்தவெதன்னோ வென்பெண் திறத்து. ௨.

திறத்திவளை யிந்தகதி செய்தவனே யொன்று
குறத்திதனைக் கேட்கக் குறித்து—முறத்தி
லெறிந்தாள் சிலநெல் லெழின்முட்ட மாலென்
றறிந்தாள் புகன்றா ளடுத்து ௩.

அடுத்தவனைக்கு முந்நீ ரழகன்வந் தென்னை
எடுத்தணைக்கு மென்றிரங்கு மென்வாய்க்—கடுத்த
மொழியுங்கொள் ளாளெங்கேமுட்டமெனுங்கண்ணீர்
பொழியுமிப் பேதை புலர்ந்து. ௪.

புலவிதரு மென்னும் புகழ்முட்டத் தென்மால்
சலவிதரு மென்னுங் கலுழுஞ்—சுலவித்
திசையெங்கும் பார்க்குஞ் சிரிக்குமென் செய்கேனே
வசையெங்கும் வாய்க்கவென் மாது. ௫

மாதிவட் குற்றவிது மாறோ யிறைச்சி மது
தீதிவ் வெறிவிலக்கிச் சீமுட்டத்—தாதிமிலே
தாரார் துழாய்கொணர்ந்து தாய்மீ ரணிமினிவள்
வாரார் முலைமே லிசைந்து. ௬.

இசைந்துண் டறியா ளிரா வுறக்கங் கொள்ளாள்
அசைந்தவளை சோரத்தன் அங்கை—பிசைந்து
விழைகொண் டேன்முட்டத் துறைவந்தேவாவென்னும்
பிழைகொண் டேன்றனிவளைப் பெற்று.

பெற்றாள் பிறர்கவ்வைப் பேசிடவென் பேதைப்பெண்
உற்றாள் திறைநாண மாவியெழ—வுற்றாள்
மழைவண்ண முட்டத்து மாயா வினிநீ
இழைவண்ண மென்ன வியப்பு. ௮.

இப்பு நமை யெண்ணா ளிதய மிழந்தாள்
கயப்புனாய் கண்ணிணைநீர் கான்றச்—சுயப்புத்

தனியாசை முட்டஞ்செல் தையல்தனைத் தாய்மீர்
இனியாசை விட்டிடுமி னிங்கு.
இங்கனைவிட டேங்கி யெழின்முட்டம்போயினளென்
அங்கனையெவ் வாறினியா றாற்றுவேன்—நங்கைநல
நீங்கநனி சென்றாள் நெடுவழியென் றெங்குமலர்
ஓங்கநனி தூற்றுமுலகு. ம.

வதரியாச்சிரமம்.

வானோங்குந்தனியிமய மலைவாய் மன்னும்
வதரியாச்சிரமத்துள் வயங்கு மெந்தாய்
கானோங்கும் பசுந்துளவக் கண்ணி வேந்தே
கருவொழிக்குந்திருவட்டாக் கரத்தை மேனாள்
மீனோங்குங்கடலுலகில் வெளியிட்டாள் சீர்
மிகுநரநா ராயணனைவிநாசே ருன்பூந்
தேனோங்கு மடியடைந்தேன் சிறியேன யான்செய்
தீங்கனைத்தும் பொறுத்திரக்கஞ் செய்தாள்வாயே. க

ஓதியுணர்ந்துப் பிறர்க்கலுபதேசித்தும்
உலகமதி லடங்காம லுழல்வேன் றீயேன்
நீதியுடன் பிறர்குணங்கள் நிலவப் போக்கி
நெய்பரிபோல் குற்றமதே நிதமுங் கொள்வேன்
மாதியன்மெய்யரன்சாபம் மாற்றியாண்ட
மாவதரி யாச்சிரம மாலே முன்னாள்
ஆதியெனு மானைமுன மணுகிக் காத்த
அப்பாவே யென்னையுநீ யாட்கொள்வாயே. உ

ஆங்காரம் பொருளாசை யரிவை காமம்
ஆகாவென்றறிந்திருந்து மகன்றே னல்லேன்
தீங்காரச் சிந்தையுரை செய்கை யாலுஞ்
செய்திட்டே னியமனெனைச் சினந்துவந்தே
சாங்கால மணுகியெதிர்த் தடர்த்தி டாமல்
தண்ணருள்செய் துன்கமலத் தாளீந்தாள்வாய்
ஓங்காரத் துட்பொருளே யுலகம்போற்ற
வுயர்வதரியாச்சிரமத் துறையு மாலே, ௩.

கடந்தவனென் றிடப்பகட்டிக் கடன்ஞாலத்துள்
கரந்துழல்வே னிணைமுலைவேற் கருங்கண்வேய்
[த்தோள்
மடந்தையர்தம் மாமோக வலைவாய் சிக்கி
வருந்தினேன் மதிமயங்கி வாணாளெல்லாம்
அடர்ந்தியமன் வருஞ்செறமென் றஞ்சிநின்றாள்
அபயமென வந்தடைந்தே னமரரேத்தும்
படர்ந்தபுகழ் வதரியினுள் பசும்பொற்சோதிப்
பாழியுறை பரஞ்சுடரே பாலிப்பாயே ௪

நகஞ்சதைப்போல் பலநாட்கள் நட்டுநின்ற
நல்லாரைக் கலைத்தவர்தம் நட்பைப்போக்கி
அகஞ்சலிக்கப் பிரித்திட்டே னளற்றிலுய்க்கும்
ஆசையெனுங் கடலழுந்தி யழுங்காநின்றேன்
சகம்புகழு மறிஞர்மனஞ் சாம்பச்செய்தேன்
சந்ததமும் பலகுற்றஞ் சமிக்கக்கொள்வாய்
சுகந்தருமா வதரியுறை சுருதிபோற்றுஞ்
சுந்தரத்தோள் பைந்துளவச் சுகுணதேவே. ௫

கொங்கையெழு முரமடவார் கொடுமைசெய்யுங்
கூற்றெனச்சொல் பலநன்னூல் குவியல்கற்றுஞ்
சங்கையற மருவியவர் தமக்காட்செய்து
சந்ததமுங் கெட்டலைந்து தளர்ந்துநொந்தேன்
செங்கைவரு பரன்சாபந் தீர்த்தநின்பொற்
சேவடியை வந்தடைந்தேன் தேவர்போற்ற
கங்கைவரு மிமயத்துள் கதநீர்குண்டக்
கரைவதரி யுறைவரத காத்தாள்வாயே. ௬

பெண்ணான திரத்தநரம் பென்புரோமம்
பெருகுமலக் குடல்வழும்பூன் பிணத்தோலாகும்
எண்ணான பற்றிவற்றுள் எதுகொல்சொல்லா
யெத்தனைதா னுரைப்பதுனக் கேழைநெஞ்சே
புண்ணான படுகுழிப்பாய் வீழ்ந்துமோசம்
போகாம லினியிமயப் பொருப்பில்விண்மண்

கண்ணனவதரியுறை கருணை பாலைக்
கன்மணியை நினைந்தென்றுங் களித்துய்வாயே. எ

பாகவத னொருவன்றான் பணித்தபாற்றம்
படுக்கையின்வாய் மடவரல்சொல் பணிபட்டாதல்
தேகவியல் பினைநோக்கிச் சிந்தையானுஞ்
சினந்து வெறுத்தல்கடத்தல் செய்யாதேற்றுச்
சோகமறச் செய்கவெனுஞ் சுகனனூலைத்
தொடர்ந்தொரு நாளுப்புரிந்து தொலைந்தேனல் [லேன்.

மாசமுயரிமயத்துள் வதரி யார்ந்த
மணிவண்ணா கண்ணாநீ மகிழ்ந்தாள்வாயே
எத்தனைநூல் கற்றுமுன திணைபொற்றாண்மேல்
எள்ளளவும் பத்தியில்லை யென்னான்செய்கேன்
உத்தமமா முன்குணங்க ளோதக்கேட்டால்
உறுதியுள்ள கருங்கல்லு முருகுமென்பாழ்
சித்தமது கரைந்திலது சிறிதுஞ்செய்த
தீவினையோ யாதோநான் தெளியகில்லேன்
கைத்தலத்தி லாழியொளிர் கண்ணாவானோர்
கழல்பணி யவதரியுறை கமலைகோவே. ௯

தேவசன நடையாடாத் திங்களாறுந்
தெய்வமுநி பூசிக்கத் திசமூபெந்தாய்
நாவசன மதற்கெட்டா நலசதாபு பார்கள்
நன்குபுசழ்வதரியுறை நர்பா மேலாரு
சீவசன பூடணநூல் தெளிவாய்க் கற்றுந்
திருந்தகிலே னற்பமும்யான் செகத்தில்வேண்டி
மேவசன மதற்குழல்வேன் பெய்சற்றில்லேன்
வினையென்னை யருள்புரிந்து விழைந்தாள்வாயே. ௰

திருமாலிருஞ்சோலை.

திங்கள் மாசிரஞ் சோத்தி கழந்தொளிர்
வெங்கண் மாக்கரி யார்விடை வெற்பெனும்

சென்னை

அங்கண் மாலிருஞ் சோலைப விர்க்குறுஞ்
செங்கண் மாலடி சேர்தியென் னெஞ்சமே. ௧

சேர்ந்த நற்கிலம் பாருசி ரஞ்செறி இ
வார்ந்த வண்டிரு மாலிருஞ் சோலையுள்
ஆர்ந்த வென்னழ காநின் னடிக்கண்மெய்
கூர்ந்த பத்திய ருளெனைக் கூவியே ௨.

கூவி நின்பெய ருள்ளங்கு ழைந்துமெய்
யாவி னைந்தழு தாருஞ்சி ரித்திடத்
தாவி நான்குதித் தாடத்த யைபுரி
மேவி மாலிருஞ் சோலைவாழ் மெய்யனே. ௩.

பெய்யிலாதவிவ் வாழ்க்கையை வேண்டிலேன்
செப்பி லாதவெ னக்கருள் சேமவெண்
ணெய்யி லாதர நீடிய நின்மலா
பொய்யி லாதவண் சோலைப்பொருப்பனே. ௪

பொருந்து மென்முலை மாதர்பு ணர்ச்சியை
இருந்து சொப்பனத் தேனுமெண் ணுமல்நான்
திருந்து மாறருள் சீர்விது ரன்விருந்
தருந்து மாலிருஞ் சோலைவா ழண்ணலே. ௫.

சோலை மாமலை யார்சுடர்ச் சோதியை
மேலைபார் தெளி விண்ணவ ராதியை
வேலை வாய்துயில் கூரருள் வித்தினை
மாலை வாழ்த்துதும் வாமட நெஞ்சமே. ௬

நெஞ்ச மேயிரு காமமு நீத்திலை
வஞ்ச மார்ந்தனை மாலிருஞ் சோலைமால்
சஞ்ச மன்னக ழலிணை காண்கிலை
நஞ்ச மன்னந மற்கென்ன வில்லையே ௭.

வைய மன்னிய மாலிருஞ் சோலைவாழ்
ஐய வென்னை யடிமை கொண்டாண்டருள்
பைய வின்னல்செய் யைவர்க்காட் பட்டுநான்
வைய மன்னியு ழன்றிடல் ஞாயமோ. ௮.

ஞாய மாமறை யோர்புகழ் ஞாலத்தைத்
தாய பாதவ னாந்தநற் றண்சுனை
தூய மாலிருஞ் சோலையொன் றுந்தொழ
மாய மாவினை யாவன மாயுமே. ௰

யாவ ரும்பிற யாவுடா யார்ந்திடும்
ஓவ றுந்திரு மால்சென் றுறையிடந்
தூவ ருஞ்சுனை மாலிருஞ் சோலையாந்
தேவ ருந்தொழுந் திங்கள்சேர் வெற்பதே. ௧௰

திருக்கோவலூர்.

பூவருசெந் திருவோடு புவிதாய வுத்தமன்முப்
போதில் வந்த
மூவருமின் புறநெருக்கி முதிர்ஞானச் சுடர்விளக்கின்
முன்னின் றார்ந்த
தேவரும்வந் திறைஞ்சுமெழில் திருக்கோவலூரதனுள்
திகழும் விந்தைக்
காவருமம் மடக்கன்னி காக்குமிடை கழியடைந்து
களிப்பாய் நெஞ்சே. ௧.

பாயலைநீர்க் கோவலூறை பரமபிரா யச்சித்தம்
பண்ணு நிற்பார்
நாயகத்தோர் முறைநுழையி னன்றிகொனற நெடுநீச
நாயிற் கீழேன்
நீயமர்ந்த சந்நிதிக்குள் நிதநுழைந்து வெளிவருவே
னிதற்கு நஞ்சைப்
பேயளிக்க வுண்டபித்தா பிராயச்சித் தமதென்கொல்
பேசு வாயே. ௨

(யிலேன்
வாயினிலோ ரின்சொலிலேன் மனத்திலொருதூய்மை
மாளாக் காம
[முரைத்தும்
நோயில்வருந் திடுங்கொடியேன் நான்முறையோதியு
நோலேன் கோவத்

தீயில்விழுந் துருவழிந்தேன் சீர்பெறுமெம்பெருமானார்
சியர் சேருங்
கோயில்கிடந் துபவருள்வாய் கோவலிடை கழிதிகழுங்
குணப்பொற் குன்றே. ௩

குணமேயசிட்டர்புகழ் கோவலிடை கழியமர்ந்த
கோவே நாளும்
பணமேயென் றலைந்துபிறர் பணித்திடுமேவலைச்சுமந்து
பதரே யானேன்
நிணமேய வுடல்வளர்த்தேனுய் வெண்ணி நினையிறையு
நினைத்தே னல்லேன்
(ந்தேன்
பிணமே யென்றிடத்திரிந்தேன் பெரிதுமுயிர்க்கிடர்புரி
பேய னேனே. ௪

பேயனே யிவனென்று பேசியுலகோர்சிரிக்கப்
போர வன்பால்
நாயனே னுனையலற்றி நாத்தடிப்பத் திரியவருள்
நளினத்தாய்ச்சி
நேயனே யுலகுய்யநெடுமாடக் கோவலிடை
நேர்ந்து நின்ற
ஆயனே யடியருக்காராவமுதே யயர்வறுமெய்
யமரரேறே. ௫

ஏறுதபவக்கடலி னிடைவிழுந்தேன் கரையேற்றி
யெனையாட்கொள்வாய்
ஆறுதபுண்ணுள னன்னமருந் தியவமலா
வருச்சு னற்குக்
கூறுதவிரகசிய முலகுய்யக் கூறுபர
குற்றங் கண்டு
சீறுதகுணநேச திருக்கோவலூர் வாச
தேகளீசா. ௬

தேகாந்தத்துதவகில்லார் சிறிதுமனை மக்களெனத்
தெரியா தந்தோ

மோகாந்தகாரமதில் முட்டிக்கொண் டலமந்தேன்
முனமின் றோர்ந்தேன்
ஏகாந்தமெனநின்பொன் னிணைபடியை வந்தடைந்தே
னென்னை யாட்கொள்வாய்
மாகாந்தகோவல்நகர் மன்னு திரி விக்கிரம
வடிவத் தெந்தாய். எ

(தமிழால்
வடித்தருநி வேல்வலவன் மங்கையர்கோன் மறைத்
வழுத்துஞ் சீரார்
கொடித்தவழுமணி மாடக் கோவலிடை கழிதிகழுங்
குணத்தின் மிக்கோய்
படித்தவனென் றிடவுலகைப் பகட்டியுனக்கேயடிமைப்
பட்டார் போல
நடித்தவெனக் குன்னடியை நல்குதியோநீக்காதிந்
தானி லத்தே. அ

நிலத்திலடி மூன்றெனக்கு நீதாவென் றேற்றுநனி
நிமிர்ந்தன் றோங்கி
வலத்திலுயர்தாளிணைபால் மாநிலம் விண்ணளந்தம்மா
வலியைக் கீழாந்
தலத்திலுறவழுத்திபவத் தற்பரனை நால்வேதச்
சதுரர் வாழும்
நலத்திலுயர் கோவல்நகர் நண்ணிவழுத்துனர்க்கில்லை
நரகந் தானே. கூ

தானவர்க முடல்தடிந்த சக்கரக்கைத்தனியாசே
தயைமிக் கார்ந்த
தேனமரு மலர்மங்கைத் திருவாளா கோவலுறை
செல்வ மாலே
கானமருந்தண்டுளவக் கண்ணி முடி யோய்நாயிற்
கடையேனு னென்
(த்தா
ஊனமரு முடற்சிறையை யொழித்தருள்வா யுனதிணை
ளுயர்பொற் பூவே. ௰

திருச்சித்திரகூடம்

சித்திரகூடத்திலுறை செங்கண்மா லென்னழகன்
கத்திரபந்துக்குபருள் கபலையுரக் கார்வண்ணன்
(ண்டனன்காண்
குத்திமஞ்செய் தென்னிறைநாண் மூலையமனங்கொ
பத்திரக்கண் பாங்கியென்னைப்பரிந்துகாப்பாரெவரே

காப்பாரிங் கில்லையினி கடுவினையேன்விடுதூதாய்
தீப்பாவங் தீதப்தில்லைச் சித்திரகூடஞ்சென்றே
மாப்பாம்பிற் கண்டுயிலு பாலுக்கென்னிலைசொல்லி
சேர்ப்பாயென மீனுடனிமேசர் சிறையவிரும்வரிவண்டே

வண்மையுறு சிறுபூவாய் வாயூட்டியுனைவளர்த்தேன்
[ண்மணிமாமை
பெண்மையிழந்தேன் பிழைமேயன் பெயர்ந்ததுகா
திண்மையிது நீசென்றென் சித்திரகூடப்பரற்கிவ்
யாயே
வுண்மைதனைச் சொல்லி புனமே யாடிவந்தெற்குரை

ஆய்வாயு மடங்கா தவ்வன் றிக்பெனடக்குராலடுமால்
ஓய்வாகா தின்றிரவோ ரூழியென நீண்டிடுமென
சேய்வாயங் தண்பொழில்சூழ்சித்திரகூடத்தழகன்
தூய்வாயினமுதருளான் கோழியென் செய்கேனே

என்செய்தலின்றெனிலவ்வெழில்சேரன்கலிகன்றி
தென்செய்த மறைசேருஞ் சித்திரகூடத்தழகன்
[ந்தென்
தன்செய்த தடமார்பில் தண்டுளவத்தார்காணர்
[ட்டீரே
பொன்செய்த மென்முலைமேல் பொருத்தமுட்டு

பூட்டீர்சித் திரகூடப்பொன்னிறமுத்தென்முலையில்
[ணிரினக்
வேட்டீரான் றேர்பெண்ணேழ்விடையட்டீர் கா

காட்டேரென் னிலையெல்லாங் கழறீர் காமப்பிணியை
வாட்டேராம் மாதவனும் மறந்தனனல் தாய்மீரே. ௬

தாயாய பாவியரேசதிரில்லாத் தோழியரோ
ஆயாமலடுகின்றீராவாவா தரியேனன்
மாயாசித் திரகூடமால்வந்தென் முன்னின்றான்
ஓயாதவுந்தம்பேரொடுறவில்லையெற்கினியே. ௭

இனியேனு முன்மனஞ்சற் றிரங்காத தென்னுகருங்
கனியேசித் திரகூடக்கண்ணாவென் கற்பகமே
முனியேயென் சருபணியே முன்செய்த முழுவினையால்
தனியேநான் தவிக்கின்றேன் தாரணியில் சகவிதுவோ

தகவதனுக் காகாததனிப்பிழை நானென்செய்தேன்
செகமிகைக்குந் தில்லைத் திருச்சித்திரகூடத்தமரும்
பகவசிறைப் பறவைமிசைப் பாவியுயிர் துவவாமுன்
அகமகிழவொருநாளென்னருகே நீ வருவாயே

வருவாயென்முலைகளிடர்மாறவெனைத்தழுவிசுகந்
தருவாயெனுயிர்குலையின் தாரணியுனைப்பழிக்குங்காண்
யாய்
உருவாய்மன் மதனும்பெண்ணுடையுடுத்து முருவுடை
திருவாய்நன் மணிமார்பா சித்திரகூடத்தரசே. ௰

வில்லிபுத்தூர்

சீராரும் வில்லிபுத்தூர் செழும்பூங்காவனமுளைத்து
திருத்தார்த் தொண்டன்
நீராருமபிமான நிழல்செழித்து மெய்ஞ்ஞான
நிறைபூ வீன்று
பாராரும் பத்திமணம்பரப்பி திருப் பாவைமொழிப்
பழத்தை யீந்து
தாராரு மரங்கனரச்சயிலமிசைப் படர்கொடியைத்
தாழ்வாய் நெஞ்சே. ௧

தாழ்வகலப் புதுவையவதரித்தபொறைச் சகமகளாந்
தாயே பின்னைக்

றை
கேழ்முலையா மலைதுயிலுங் கிருட்டினனையெழுப்பிய
கிளத்து மான்ம
வாழ்வளிக்கு மரும்பாரதந்திரிய மதையுணர்த்தி
வரமாம் பேற்றை
ஆழ்கடற்பாருபக்கொண்ட வாண்டாளாமாய்ச்சிபெனை
யாண்டாள் வாயே. ௨

ஆய்ச்சியர்த முடைநடைபேச் சனுகாரமுதிர்ந்தாய்ச்சி
யான கோவை
வாய்ச்சிதிரு மார்கழிநீராடியமா மாதரசி
மலர்த்தார் சூடிப்
பேய்ச்சிமுலை யுண்டவட பெருங்கோயில்மாற்களித்த
பெருமைக் கோதை

ளுங்கீழ்
நாய்ச்சிசர ணெனவுன்பொன் னடியடைந்தேனாயி
நாளுள் வாயே. ௩

நாணிலத்தி லுனதழக னருட்கிலக்காய் நானுய்ய
நலஞ்செய் தாள்வாய்
வானிலத்தி லெவருமுறவந்துதித்த பெருமாட்டி
யாலா காரர்

சூடிக்
கோனிலத்தில் வளர்ந்தருள்பூங் கொம்பேபூந்தொடை
கொடுத்த பொன்னே

புத்தூர்
தேனிலத்தில் வார்பொழிற்சூழ் செகந்துதிக்கும்வில்லி
செல்வத் தாயே. ௪

செல்வியையுங் கருங்குழலிவிண்டுசித்தன் பெற்றெடுத்த
செல்வப் பாவை

சல்லியத்தைத் தீர்க்கவந்த சாமியிராமாநுசனற்
றங்கை யாகும்
மெல்லியலவ் வரங்கமன்னார் விரும்மகிழ் பெருந்தேவி
விமலப் பொற்றாள்
மல்லிவள நாடுடையவண்ணைமிகு புதுவையிற்போய்
வாழ்த்தாய் நெஞ்சே ௫.

நாம்
புதுவைநகர் வளர்ந்தருளும்பொற்கொடியை யுனக்கே
பொலிந்தாட் செய்வோம்
மதுவைபுரி கோவிந்தாமற்றைநங் காமங்கள்
மாற்றென் றனை
விதுவைநிகர் முகத்தாளைவிண்டுசித்தன் பெற்றெடுத்த
வேற்கண் ணாளை
[வோம்
மதுவைபடி மாங்கமன்னார் வல்லவையைத் தொழுதெழு
வாராய் நெஞ்சே. ௬

வல்லுபரி சரவணையார்மாதவரை விண்டுசித்தர்
வருவிப் பாரேல்
நல்லவென துயிர்த்தோழி நாங்காண்டுமெனவேத
நாவகந் தத்திம்
ன்றன்
சொல்லுமத னுட்பொருளைச்சொன்னவென தாய்ச்சியு
றுணவன் முன்பு
பல்லகஞ்செய் யென தருறைபகர்ந் தருளுக் கிலக்காக்கி
பாவிப் பாயே. ௭

பாயவைதண் கடலுலகில்பழுத்ததம மாம்பரம
பத்தி யாலும்
சாபகமதனைவிழித்தடமுலைப்பெண் தானென
தன்மை யாலும்
ஆயநல மதிபெறுமாழ்வார்கடயி லறச்சிறந்த
வாய்ச்சி யான

தூயநகர் வில்லிபுத்தூர் சுந்தரிதாட் டுணையெனப்பேணாய்
தொழுவாய் நெஞ்சே ௮

நெஞ்சறியப் பொல்லாங்கு நினைத்தேனுன் டலகோடி
நிரம்பச் செய்தேன் [ல்லாம்

வஞ்சகம்போய் வீண்வார்த்தை வசையாடல் காலமெ
வதறிப் போந்தேன்

நஞ்சனைய பெரும்பாவி நரபசுநான் னரகழுத்தும்
நமனார்க் கஞ்சி

தஞ்சமென வந்தடைந்தேன் புதுவைவருந் தாயேநீ
தயை செய்வாயே ௯.

தாயாகும் நீபொறுப்ப தல்லால்மற் றெவர்பொறுப்பார்
தரைக்கண் பொல்லாப்

பேயாகும் மனமுடம்பு பேச்சால்யான் றளுஞ்செய்
பிழைகள் நோக்கி

நாயாகு மெனையியம னணுகாதாள் பட்டர்பிரான்
னலத்தால் பெற்ற

சேயாகுந் திருப்பாவைச் செல்விவில்லி புத்தூர்வாழ்
சீர்சான்ற மாதே. ௰.

திருப்

பதிகமஞ்சரி முற்றுப்பெற்றது